கனவில் கண்ட கவி

T21168
R004F02

வாழ்கத் திராவிடம்! வாழ்கத் திராவிடர்!!

எங்களிடம்

- திராவிட கழக வெளியீடுகளும், பொதுவுடமைப் பிரசுரங்களும், பகுத்தறிவை வளர்க்கும் பண்புள்ள நூல்களும்!
- அரசியல் சம்பந்தமான அரியபெரிய நூல் வகைகளும்!!
- திராவிட கலா நிலைய வெளியீடுகளும் அவ்வப்போது தவராது மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்!!!

இந்தியன் நியூஸ் ஏஜன்ஸி

135, மார்க்கட் தெரு, : : சிங்கப்பூர்.

தமிழ்நாட்டு மக்களுக்கு ஓர் நற்செய்தி!

அன்புடையீர்!

எங்கள் புகைப்படச் சாலையில் உயர்தரமான புகைப்படங்களும், உன்னதமான ஓவியங்களும், குறித்த காலத்தில், குறைந்த விகிதத்தில் தயார் செய்து கொடுக்கிறோம்!

அன்பர்கள் தவராது நல்வரவு தந்து எங்களை ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்!

இங்ஙனம்:—M. அகஸ்டின்

மினர்வா ஸ்டுடியோஸ்

தலைமை யகம்: 60, மேலக்கோபுரவாசல் மதுரை.

கிளை யகம்: 259, பூந்தமல்லி ஹைரோடு பெரியமேட், சென்னை.

கனவில் கண்ட கவி

ஆக்கியோன்

'விவேகி'

வெளியிடுவோர்

திராவிட கலா நிலையம்

55, முக்தாருன்னிஸா பேகம் தெருவு,

மவுண்ட்ரோடு, : : சென்னை.

பதிப்புரிமையுடையது] 1947 [விலை அணு 10.

உங்கள் நிலையங்களுக்கும் வீடுகளுக்கும் மின்சாரவசதிகள் வேண்டுமா ?

❁

- எங்களிடம் சகலவிதமான மின்சார வசதிகளுக்கும் சாமான்கள் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

- எங்களிடமுள்ள தேர்ச்சிமிக்க மின்சாரத் தொழிலாளர்கள் திராவிட மக்களின் நம்பிக்கைக்கு முழுப்பாத்திரமானவர்கள்.

- திராவிட நாடு முழுவதும் மின்சார வசதிகள் மலிந்து இன்பமுறும் விதமாகச் செய்யவேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள் !

❁

இங்ஙனம்

N. ஆறுமுகம், L. E. E.,

புவன எலக்டிரிக் கம்பெனி

எலக்டிரிக்கல் எஞ்சினியர்ஸ், கண்டிராக்டர்ஸ், & டீலர்ஸ்

புவனகிரி, P. O., (Via) சிதம்பரம், S.I.Ry.

பொருள் அடக்கம்

காட்சிகள்.		பக்கம்.
	நூன்முகம்	
	சிறப்புப்பாக்கள்	
1	கவி காணும் கனவு	1
2	கனவில் கண்ட கவி முழக்கம் ...	2
3	கவி அறியும் உளவு	4
4	அணித் தலைவனுக்குத் தூது ...	7
5	கோயிலில் நுழைவுத் தண்டோரா ...	9
6	ஆலயப் பிரவேசம்	10
7	பார்ப்பனர்க்குப் புத்திகூறல் ...	12
8	கோயிலுக்குள் நரர்பலி ...	14
9	கவியின் குமுறல்	15
10	கோயில் கதவுடைப்பு	16
11	பிணங்களின் ஊர்வலம் ...	19
12	பார்ப்பனர் சதி	21
13	கருப்புச் சட்டைப்படை உதவி ...	23
14	இரணகளத்தில் காதல்!... ...	24
15	புரட்சி!	27
16	சிறைப் பிரவேசம்	30
17	எங்கும் இன எழுச்சி! ...	33
18	சட்ட சபையில் இனப்போர் ...	36
19	வெற்றி விழாவும், கவியின் விழிப்பும்	39

நான்முகம்

தமிழனே புலவன் தமிழகத்தில் தமிழேயுளதோ ?
தமிழனே பக்தன் தமிழ்மொழி வழிபாடறிவானோ ?
தமிழனே புரோகிதத் தரகன் தமிழிலோதுவானோ ?
தமிழனே பகவானுந் தமிழ்த்துதி விரும்பானேனோ ?

கற்பனைச் சிற்பியாங் கம்பனுக்கே கலைவாணி
சொற்புணைச் சூட்சமமோடு சொல்லும் முக்காலறிவும்
கற்பினைச் செய்தாளாயினக் கவியுந் திராவிடர்
பொற்பினை அறியாது புகலுமோ குரங்கென்று ?

'மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும்
மடையர்களும் இயற்றுவார் கடவுட்பாடல்'
என்றுபல
சூடுகளும் புரட்சிக்கவி சுடச்சுடவே கொடுத்தும்
ஏடுகளும் கேடுகளாய் எழுதுவோரும் புலவர்களோ ?

நான் ஒரு கவியுமல்லன் நாவிலும் வாணியில்லை
தான் ஒரு பெருந்தமிழ்ப் புலவ னெனவே
வீண் உறு பெயரேந்தித் தன்மானம் விற்போனைக்
காண் உறு உள்ளக் குமுறலின் நூலதாமே !

இங்ஙனம்
'விவேகி'

வீறு கொண் டெழுக!

சாதியென்று தலைதூனிந்த தமிழன் அன்றே தேய்ந்தான்
சமயமெனும் படுகுழியில்வீழ்ந் தெழலைதமிழ்ந்தோ!
நாமிதனைப் பாராமல் பிறர்நலமே கருதி
நல்லதெல்லாம் பறிகொடுத்துப் பொல்லர்களா னேமே!

தான்கெட்டா லும்தநமம் தலைகாக்கும் எனவே
தலையணைமர் திரமெவனே சாற்றிவிட்டான் பாவி!
வான்கெட்டா லும்அழியா மனம்சிலஞ்சேர் தமிழன்
மானங்கெட் டேமாந்து வாழ்விழக்க லாமோ?

இனியேனும் தன்மானம் இநக்குமெனில் அதனல்
இளந்தமிழா! திராவிடனே! ஏமாற தேநீ!
பணியாதே., உன்னைப்பார்., பாநலகை நீதான்
பங்குகொண்டுன் பணியாற்று! பராமுகஞ் செய்யாதே!

சாதிமதம் சமயமெலாம் தவிடுபொடி யாக்கு!
சத்தியத்தால் தயாளத்தால் சாய்த்ததினிப் போதும்.
ஓதுசுய நலங்கநுதி இனம்நாட்டைக் காநீ!
ஓட்டாண்டி யாக்கினரை ஓட்டு,ஆண்டி ஆக்கே!

என்றெழுந்தான் கவியொநுவன்! நனவென்றல் ஏதோ!
இனியகனு வினிலேனும் இன்றுவந்தான் நன்றே!
துன்றுபல சூழ்ச்சியர சியல்பொநுளா தாரம்
துணிஅரிசி இவைக்குள்ளும் நுழைந்ததறிந் தானே!

வயிறெரிய மனமெரிய வஞ்சகர்செய் கொடுமை
வண்டவா ளங்களெலாம் அம்பலஞ்செய் கின்றன்!
உயிர்கவநும் உலுத்தரிலும் தீயர்அவர் உறவை
உதைத்தொழிக்க வழிகாட்டி உதவுகின்றன் வீரன்!

உயர்சாதி யென்பார்பெண் ஒருத்தி இவன் காதல்
உள்ளுருகி வந்தாலும் ஓட்டிடுவான் கவிஞன்
துயர்நிலைகண் டினந்தழுவி மணந்திருவ ராகித்
தோன்றுகனாக் கண்ணாடி தோழர்தரும் நூலே!

இதுகனவா! கனாக்கவியா! இந்நூலில் காண்பது
இனஎழுச்சி, தன்மானம், இழிநிலைபோக்கு ஆக்கம்,
புதுமுயற்சி, புத்துணர்வு, புரட்சிமனப் பான்மை
பொருந்து திராவிடநாட்டின் புதுப்படைப்பே அன்றோ!

வாழ்க இந்த நூலெழுதி வழங்குகலைச் செல்வன்
வளம்படைத்த திராவிடநா டோங்குக மாண்புடனே!
வீழ்க இன வீடணர்கள், வீழ்கவெறும் புலமை!
வீறுகொண்டு தன்மான வேந்தர்கள் ஓங்குகவே!

சென்னை-19.,
மே மீ 1, 1947.

இங்ஙனம்
கிளிக்காட்டு-இறையொளியனார்
திருவொற்றியூர்.

பாரதிதாசன் கருத்து

'இந்நூல் என்பார்வைக்கு வந்தது. எழுதியவர் விவேகி என்பவர். கற்பனையுள்ள முடையவர். உயர்ந்த கருத்துக்களைக் கவிதைகளில் காணுகின்றேன்......................இதை எல்லோரும் ஆதரிக்க வேண்டுகிறேன்.'

29-4-'47
சென்னை

பாரதிதாசன்

கனவில் கண்ட கவி

காட்சி 1

[ஒரு கவி தனது படுக்கையை விட்டகலாமல் கனவு உலகில் பிரயாணம் செய்கிறார்.]

(எண்சீர்)

எங்கெழுவ திம்முழக்கம் என்றையந் தோன்ற
எழுந்துநின்றேன் என்மகிழ்ச்சி என்னென்பே னடடா!
பொங்குகடல் சூழ்நமது திராவிடநா டெங்கும்
புரட்சியாம் பொறுப்புள்ள கார்ல்மார்க் ஸேபோல்
இங்குயா ரோவென்றேன்; எங்கிருந்தோ ஓர் சொல்
ஈரோட்டுப் பெரியாரென் றறியாரும் உளரோ?
எந்தலைவ ரிந்நாட்டில் விளங்கும்லெனின் இவர்தாம்
எழுப்பிய கருஞ்சட்டைப் படையை யதோ காண்பாய். 1

என்றெவ ரென்னிடம்கூறி னாரென்ப தறிய
எண்ணினேன் அங்கோரம் முன்னணியின் முன்னே
சென்றொருவர் நின்றிடலும் குன்றின் மீதேறிச்
சென்றார்கள் செருக்களஞ்செல் சிங்கவே றனையார்
நன்றவர்கள் பின்தொடர்ந்து நானுமங்கே விரைவாய்
நடந்தேறிச் செல்வனெனத் துணிவுடன் சென்றேனால்
அன்றவர்கள் ஆக்கமுறும் கவிதைபல பொழிந்தார்
அவர்தானெம் கருஞ்சட்டைப் படைக்கவிஞ ராமே! 2

காட்சி 2

[முன்னணியின் முன்னே கவிஞரின் வீரமுழக்கம்.]

(எண்சீர்)

ஆய்கின்றேமா பல்லா யிரம் ஆண்டு முன்னோர்
ஆண்டதிரா விடராட்சி ஆ! எங்கே என்று
சாய்கின்றேமே சிறைக்குள்; சமூகத்தொண் டெனவே
சதிகாரக் குண்டர்புரி அதிகாரம் சரியோ?
மாய்கின்றேமே தேயிலை ரப்பர் காட்டில்
மார்வாடி குஜராத்தி மண்டினர்திரா விடத்தே
காய்கின்றேமே வயிறாரக் கஞ்சி யின்றிக்
கயவர்க்கு வீங்குவயி றாகியதெங் கனமோ? 3

ஆரியமிங் கேநுழைந்த ஆண்டுமுத லாக
அறிவிலரென் றடிமைகளென் றானேம்நாம் இளைஞீர்!
காரியமின் றேபுரிய வாரீர் நம் கடமைக்
கலையாவ தேனுமினக் கொலைபுரியா தெரிப்பீர்!
சேரியெலாஞ் சிறந்ததிரா விடரில்லமென்றே
சென்றுபல சீர்திருத்தத் தொண்டனைத்தும் புரிவீர்!
காரியுமிழ் வீரினிஆ ரியமுபர்வென் போர்பால்
கர்ச்சிப்பீர் திராவிடநா டெங்கள்நா டென்றே! 4

வைதீகச் சேட்டையும்வர் ணாச்சார மும்பல்
வகைக்கேடாம் மூடவழக் கப்பழக்கம் பயின்றே
ஐதீக மூட்டைகளோ டவலவாழ் வடைந்தே
அறிவிலராய் நெற்றியெலா மலங்கோலஞ் செய்தார்
கைதிகளாய் இளம்விதவை வதையச் சாங்கிழவர்
கைப்பிடிக்கு மிளம்பெண்கண் ணீருகுக்கச் செய்தார்
கைதிசெய்தா லென்னவரை? இளைஞர்களே சிரார்த்தக்
கையேடு கொண்டுவரும் ஐயரையும் கவர்மின்! 5

ஓட்டியவால் போலுங்கள் பெயருக்குப் பின்னுல்
உதவாதகுறி தரித்தே பலபேத முற்றீர் !
கட்டியநூல் போலுங்கள் தோளில்தொங்கும் கயிற்றைக்
கழற்றியெறி வீருங்கள் கசடொழிப்பீர் ; இன்றே
திட்டமுடன் வாளேந்துங் கரத்துடனே செல்வோம்
திக்குகளெலாஞ்சாதித் திமிரொழித்து வருவோம்
முட்டிலைநா ளெலாமுனைந்தே இனந்தளரா எழுச்சி
மூளவே செய்வதில்நம் முழுவளர்ச்சி காண்போம் ! 6

வாளரிபோல் திராவிடரே வல்லரசு பெறுவீர்
வழியுண்டு இதுதவிர்த்து வேறேது மில்லை!
ஆளவேண் டும்நமது திராவிடம்திரா விடரால்
அன்றெனில்நா மனைவருமே ஒன்றாகக் கூடி
மாளவேண்டும் மண்டலப் பிரிவுப் போரில்
மடியாது மிஞ்சியோ ரொருவன்திரா விடனேல்
மூளவேண் டும்நமதோர் துளிரத்தந் தானும்
முடியுமள வுந்துணிந்தால் முழுவெற்றி நமதே. 7

இடியிடித்து ஓங்கிமின்னி யெழுந்ததுபோ லிருந்த
தெங்குமின எழுச்சிப்போர் முரசுகவி முழக்கம் !
துடிதுடிக்கும் நரம்பெல்லாம் ; துறுதுறுக்கு மிரத்தம் !
துயர்துடைக்க வுள்ளத்தால் துள்ளின ரெல்லோரும்
அடிஎடுத்து வைத்தகவி யப்பாலே போக
அலைகடல்போல் மீண்டெழுந்த படையினரார்ப் பொலியால்
மிடிஒழிப்போம் ! இடர்துடைப்போம் ! இனிமிருக்க
விடோம் யாம் !
விரைந்தாரி யப்பகையின் வேரறுப்போம் என்றார் ! 8

காட்சி 3

[தருப்பைப் பார்ப்பானுங் கதர்க் குல்லாப் பார்ப்பானும் நடத்தும் சம்பாசணைகளைக் கவிஞர் ஒற்றர் உடையில் சென்று கவனிக்கிறார்.]

(கண்ணிகள்)

முன்னணியில் ஊக்கி முன்னேற்றம் உரைத்த பின்னர்
தன்னணியைத் தவிர்த்து மற்றோர் ஒற்றரணி பூண்டு
உளவறிய எண்ணியொரு பூசாரி வீட்டுள்
களவுபுரி திறமுடைய கள்வரைப்போல் நுழைந்தே
ஒருவருமங் கறியாது இருவர் பேசுவதை
மறுபுறச் சுவரின் மறைவில்நின்று கேட்டார். 6

தருப்பைப் பார்ப்பான்:
தீண்டாமை ஒழிப்புப்பிரச் சாரம் போதாதோ
வேண்டாம் ஐயோ கோயில் பிரவேச மேதும்
வேதியர் பிழைப்புக்கு வேக்காடா யிடுமே!
வேதியர் நீரேயஃதை விழைதலுங் கூடிடுமோ!
சாதியினில் தாழ்வுயர்வு சமைத்தவர்கள் இங்கே
ஆதியில் நம்மூதாதை அறிவில்லா தவரோ? 10

கதர்க் குல்லாப் பார்ப்பான்:
என்னாவோய் இதற்கெல்லாம் அஞ்சிடுநீர் போம் போம்!
நன்னாஇருக்கே நும்பயம் நுணுக்க மிலையே!
நந்தன்கோயில் நுழைய வேணும் என்றுதானே
வந்தான் முன்னாள் நேர்ந்த கதையறிவீ ரன்றோ!
நினைந்துபாரும் இனிதே; நிலையோ கோயில் புகல்?
இணைந்துநீரும் இதனில் முனைந்திடலா மென்றான்! 11

இன்னென்று முக்கியமாம் என்று விளம்பிடுவான்
முன்னின்று நான்முழக்கம் செய்வேன் நீர்பின்னல்
முடியாது கோயில்நுழை வெனக்கூறும் அப்போ
முடியாது திரும்பமுடியா தென்று சொல்வேன்
நீர்உடனே, தீக்குண்டில் இறங்கெனவே காட்டும்
யார்உடனே அதிலிறங்கித் தீட்டொழிப்பார் என்றான். 12

தருப்பைப் பார்ப்பான் :

இப்படிநீர் செய்வதனல் உமக்கென்ன லாபம்?
எப்படிநீர் ஒப்புவிரோ இழிகுலத்தார் தொடரச்
சம்மதித்து விட்டீரேல் சாதிதருமம் கெடும்
நும்மதியைக் கேட்டால்நம் நிம்மதிக்குங் கேடாம்
ஒப்பிட மனந்துணியேன் கோயிலுக்குள் நுழைவு
செப்பிடவே வேண்டாம் வீண் சிரமமதே என்றான். 13

கதர்க் குல்லாப் பார்ப்பான் :

அப்படிக் கேளும்வோய்! ஈதாசியல் தந்திரமாம்
செப்படி வித்தைபோலும் செயந்தரும் மந்திரமே
வந்தேமாதரம் வாழ்க காந்திமகான் இனிதே
சந்தேகமேது மஞ்சள் பெட்டியே நிறையும்
தாழ்த்தப் பட்டோர்தந்தை என்றென்னை நினைந்து
வாழ்த்தி விட்டாலதன்பிறகு வாய்ப்பு எதிரிக்கேது? 14

காந்தி பக்தர் கதர்க்குல்லாச் சாமியா ரிவரே
சாந்திதிகழ் சமதர்ம வாதியுமாம் இவரே
ஹரிஜன சேவைகள்செய்தா ராதலினல் வோட்டுத்
தரில்முன்னம் மிகுவெற்றி யுறலாமென் பாரே
சட்டசபையில் மந்திரிப் பதவியே வகிப்பேன்
சட்டம் வருமோ கோயில் நுழைவு சகிப்பேனே? 15

தருப்பைப் பார்ப்பான்:

அப்படிச் சொல்லும்வோய்நீர் அவ்விபரம் எனக்கே
இப்படி என்றறிந்திருந்தால் ஏன் மறுப்பேன் நான்தான்
உன்மூளையே மூளை! இனி நடத்துன் வேலை
என்வேலையும் எனக்குத் தெரிந்து விட்டதிப்போ
தீமிதிக்குந் திருநாளாம் நாளையவ் வேளை
தீமிக்கக் கனலெல்லாம் திரட்டிடுவேன் நானே. 16

கதர்க் குல்லாப் பார்ப்பான்:

இப்போதே ஹரிஜனசேவா சங்கம் செல்வேன்
தப்பாதே நாளைக்கே கோயில் நுழைவென்பேன்
தண்டோராப் போட்டிடுவார் என்பெயரைச் சொல்வார்
கண்டோரெல்லாம் என்னைப் புகழ்ந்து பாடிடுவார்
கண்கொள்ளாக் காட்சியிதில் காண்பரோ நம்சூழ்ச்சி
கண்புதைந்து நிற்பர்கரம் கூப்பிநிற்பார் தாமே! 17

காட்சி 4

[கவிஞர் ஒற்றுக்கேட்டவைகளைச் சேரியிலுள்ள தொண்டர்கள் சிலர் மூலம் கருஞ்சட்டை அணித் தலைவனுக்கு அறிவிக்கிறார்.]

(கண்ணிகள்)

தொண்டர்கள் சிலரை ஒன்று கூட்டினர் ஒற்றர்
கண்டவை கேட்டவையாவுங் கூறினர் அவர்பால்
'நயவஞ்சகப் பார்ப்பார் நம்மிடையே அவர்கள்
செயவஞ்சும் செயலேது !' என்செய்வோ மென்றார்கள் !
கருஞ்சட்டை அணித்தலைவர் கண்டிருந்த விதமாம்
கனப்பொறுப்பைச் சாட்டிடலே நலமென்றார் ஒற்றர். 18

இசைந்தவிரு தொண்டரிந்தச் சேதிகளைக் கூற
விசைந்துசென்றார் பாசறைக்கண் வெற்றியுடன் நோக்கிப்
பணிபலவும் புரிந்த கருப்புச்சட்டைப் படையின்
அணித்தலைவர் அயர்ந்தப் போதங்கேதான் இருந்தார்
தொண்டரவர் வருகைகண்டார் துள்ளிஎழுந் தார்த்தார்
துரிதமுடன் புரிவதென்ன சொல்லுமென்றார் தலைவர். 19

சேரிதனைச் செம்மைசெய்யும் செம்மலே கேளிர்
ஆரியன் கதர்க்குல்லா அணிந்தவன் செய்சூது
அறிந்ததனால் இங்குவந்தோம் அவன்புரட்டைத் தீர்க்க!
தெரிந்துநீர் தக்கசெய்து தீதகற்று வீரே!
ஆதலால் ஓதுகின்றோம் அந்தப் பூசாரியோடு
மோதலால் திராவிடரை ஏய்க்க எண்ணமிட்டானென. 20

தேர்தலில் ஓட்டுவாங்கி மந்திரியாக வந்து
ஆர்தல்பெறச் சூழ்ச்சியிது ஆலயப் பிரவேசம்
ஆரம்பிப்பான் நாளை புரோகிதனும் துணையாம்
தீரமிகு தலைவா! தீட்டொழிக்கத் திராவிடரைத்
தீக்குளிக்க வேண்டுமென்று தெரிவிப்பா னுமே!
தீக்குண்டில் குதிக்காதார் திரும்பணுமாம் வீணே. 21

என்றவர்கள் கூறிய தறிந்தஅணித் தலைவர்
சென்றவர்கள் செய்சூழ்ச்சி நாளைக்கே காண்போம்
தொண்டர்படை எதற்கும் அங்கு துணிந்துநிறைந் திருப்பீர்!
குண்டர் கொடுக்கத்துணியும் கொடுந்தொல்லை சகிப்பீர்!
கொள்கைக்குத் திரணமென உயிர்கொடுக்கும் குணத்தின்!
எல்லைக்குள் எய்திவிட்டோம்! இனிஎழுவோம் என்றார். 22

காட்சி 5

[*ஹரிஜன சேவாசங்கத் தொண்டர் தண்டோராப் போடு கிறார்.*]

டமடம் டமடம் டமடம் டம்டம்
டமடம டமடம டமடம்! டம் !! டம் !!!
வந்தே மாதரம் பாரத்மா தாக்கி
மகாத்மா காந்திக்கி ஜே! ஜே !! ஜே !!!
சோதர சகோதிரிகாள்! இதன் மூலம்
சகலருக்கும் தெரிவிப்ப தென்னவென்றால் கேளீர்!
இன்றுமாலை, கதர்க்குல்லாச் சாமி காந்திபக்தர்
என்றாலே தெரியுமே அவர்தலைமையின் கீழ்
ஹரிஜன் ஊர்வலமாம் ஆலயப் பிரவேசமுமாம்!
சரிசமம் தரப்போறோம் சகலரும் வாரீரே!
டம்டம் டம்டம் டம்டம் டம்டம்
டமடம டமடம டமடம ....

காட்சி 6

[கறுப்புச் சட்டை அணித்தலைவர் ஆரியர் சூழ்ச்சியைத் தகர்த்து ஆலயப் பிரவேசத்தை நடத்துகிறார்]

(அகவல்)

சேரிவாழ் மக்கள்எல்லாம் சேர்ந்த பெருந்திரளை
ஆரியரே அழைத்துவந்தார் ஆலயத்துள் நுழைவுஎன்றார்
ஊர்வலமே வருகின்றார் ஊராரும் அறிவார்கள்
'நீர்வளமும் நிலவளமும் நிறையும் பாரதத்தேயம்
வாழ்க! வாழ்க! வந்தேமாதரம் காந்திக்கு ஜே! ஜே!
வீழ்க ! வீழ்க! ஏகாதிபத்தியம்' என்றுரைய்யர். 24

எல்லோரும் சேர்ந்துகொண்டு ஏனேமுழங்கி னாரதை
வல்லோராம் ஏகாதிபத்தியரோ!, 'வாராதீர்
தீண்டத் தகாதீர்நீர் கோயிலுக்குள்!' என்றாரோ?
தீண்டோம்நாம் பஞ்சமரை என்றஞ்சி முன்னோடும்
ஆரியமே வீழ்க! வீழ்க! என்றேன் முழக்கமிலையென
வீரியம்பே சாரியரை வினவியறி வாருமிலையே. 25

தெருவெலாம் தீரனென முழங்கிய ஆரியன்தான்
ஒருவரு மறியாமல் கோயில் கதவோரத்தில்
மறைவாகப் போய் நின்றுவிட்டானங்கே மக்கள்
விரைவாகக் கோயிலுக்குள் புகமுயன்று விட்டார்கள்
முன்னேற்பாடதன் முறையை முழக்கினன் பூசாரி
என்னேற்பா டித்தீக்குண் டிறங்குமிதி லென்றான். 26

அந்த மொழிகேட்டு மக்கள் அரண்டனர்க ளங்கே
வந்த ஆரியன்வாய் திறந்தொரு வார்த்தையுஞ்
சொல்லானே

'திரும்பிட மாட்டோம்' என்றோர் திடீர்குரல்தான் கேட்டுத்
திரும்பிப் பார்த்தேயப் பூசாரி திடுக்கிட்டான்
'பூ தேவரே! உம்மைப் பொசுக்காத் தீயுண்டோ?
யாதேவரினும் இருவருமா யிறங்கிக் காட்ட லாமே.' 27

என்றழைத்தான் கருஞ்சட்டை அணித்தலைவ னியம்பி
அன்றழைத்த மக்களுக்குள் ஒருவன் அவனுமென
அறியார் போலும்!! ஆரிய ரனைவரும் உடனே
வெறியேறும் வீணர்களாய் வெளியேறி விட்டார்
தடுப்பார் அற்றோர் தாழ்த்தப் பட்டோர்கள் அங்கே
விடுப்பாரோ! கோயில் நுழையாமலவர் விரைந்து. 28

காட்சி 7

[பொது மக்களிடம் ஓலமிடும் பார்ப்பனர்க்குப் பொது மக்களே புத்தி கூறுகின்றனர்.]

(எண்சீர்)

ஓடிய பூசாரியவன் ஊருக்குள் நுழைந்தான்
ஒவ்வாத செய்கையினல் குடிமுழுகிற் றென்றான்
கூடியமக்கள் வந்த கேடென்ன என்றார்
கோயிலுக்குள் புலையர்மிகப் புகுந்துவிட்டார் ஐயோ
ஆடியபாதன் தலந்தீட் டாகிவிட் டதனுல்
ஆண்டவன்கோபம் பொல்லாத தாகுதென்றான் பூசாரி
தேடிய கதர்க்குல்லாப் பார்ப்பானு மங்கே
திடமுடனே வந்துஇது பலாத்காரம் என்றான். 29

யாரப்பா பலாத்காரம்! என்னப்பா நடந்தது!
என்றவர்முன் கட்டுகின்றான் கற்பனைக் கதையை
'பாரப்பா நானொருவன் காந்திபக்தன் இங்கே
பக்குவமாய் ஆலயப் பிரவேசம் அதனைச்
சீரப்பா காந்திமகான் செய்தி இஃதென்று
சிரம்பணிந்து பூசாரி இவருக்கு உரைத்தேன்
தூரப்போ என்றான் கருஞ்சட்டைக் காரன்
துடுக்குடனே எல்லோரும் நுழைந்திட்டார்' என்றான். 30

அதற்காகவே ஊரில்வலம் வந்தீர் இன்று
ஆனது கோயில் நுழைவுமன்றோ! இப்போது
எதற்காக வருந்துகிறீர் கதர்க்குல்லாவே நீர்
என்றாரிடம் மிரண்டு சொல்வான் ஐயய்யோ!
அதற்காக இல்லையே எம்முடைய வருத்தம்

அக்கருப்புச் சட்டையர்கள் நாத்திகர்களாமே
இதற்காக அன்றோ எம்கவலை இப்போதேநாம்
எல்லோரும் சென்றுக்கால் துரத்திடலா மென்றான். 31

நாத்திகரோ ? ஏன் அவர்கள் கோயிலுக்குள் போவார்
நல்லதொருவேளை வர நம்பிஅவர் இருப்பார்
ஆத்திகர் கடவுளரும் அருள் பாலிப்பாரே
அவதியேன் ஐயர்காள் நற்காலம் உமக்கே
ஆத்திரமே படவேண்டாம் அமைதியா யிருங்கள்
அங்குசென்று லன்னவர்கள் ஆவலாய்ப் புரியும்
தோத்திரந்தோறும் துட்டு வாங்கலாம் காணீர்
தொந்தரவில்லாப் பிழைப்பால் தொகைமிகும்
என்றார்கள். 32

காட்சி 8

[கோயிலுக்குள் நுழைந்தவர்களைக் கொல்லும் எண்ணத்தால் பார்ப்பனர்கள் கோயிலுக்குள் மிளகாய்த்தூள் புகையுண்டாக்கிக் கதவுகளைப் பூட்டி விட்டனர்.]

(எண்சீர்)

பார்ப்பனர் பசப்புகள் பலிக்க வில்லை
பாழ்ங்கோபம் முற்றிப் பெரிதாச்சு
பார்ப்பன ரிருவர் கருத்தும் ஒன்றே
பஞ்சமரைக் கோயிலுள் கொல்லவேண்டும்
பார்க்கலாம் முயன்று எனும் எண்ணம்
பாய்ந்தனர் கோயிலுக்குத் திரும்பியங்கே
பார்த்தனர் அக்கினிக் குண்டத் துள்ளே
பருங்கனலைக் கோயிலுக்குள் எடுத்துப் போட்டார். 33

கொலைகாரன் கதர்க்குல்லாத் தலைப்பார்ப்பான்
கொண்டு வந்தான் மிளகாய்த் தூளை
மலையாது கொட்டினன் கனல் மீது
மறுகணமே கதவடைத்துப் பூட்டிவிட்டார்
நுழையாதார் நுழைந்த கோயிலுள்ளே
நுகரும் மிளகாய்த்தூள் புகை கிளம்பி
நுழையாத இடமே இல்லை யங்கே
நூர்ந்தன மக்கள் உயிர்கள் பலவே. 34

காட்சி 9

[பார்ப்பனக் கொலைஞர்கள் செயல் கண்டு உள்ளங் குமுறுகிறார் ஒற்றர் உடையில் ஒளிந்திருந்த கவி.]

(அறுசீர்)

கொல்லும் தொழில் கொண்டோர்
கொலைஞர் யாகக் குண்டர்
சொல்லும் செயலும் பொருந்தார்
சூதரடா! தன்மானத் தோழனே!
கல்லும் செம்பும் கடவுளெனக்
கலங்காது கூறும் கயவர்
கொள்ளும் தொழிலதே இன்னும்
குடிக்குதே திராவிட ருயிரை! 35

சாத்திரம் எழுதினர் சழக்கர்
சமத்துவ மென்பதே இல்லை
சூத்திரர் என்றே திராவிடரில்
சூழ்ச்சி செய்தே பெரும்பாலார்
ஆத்திரம் அடையா தென்றென்றும்
அடிமையா யிருக்கக் கல்வியெனும்
நேத்திரம் பிடுங்கி விட்டார்கள்
நேர்ந்ததே வீழ்ச்சி இங்கந்தோ! 36

சாதித்திமிர் தாம் தளிர்த்திடவே
சனாதன தர்மமென் றொன்றைப்
போதித்தார் புரோகிதப் புல்லர்
புரட்டிதை யறியாத் திராவிடர்கள்
நீதித் தவறே புரிந்தார்கள்
நெடுங்கழு வேற்றிய கதைகாணீர்!
வாதித்தோரை வாழ்த்தினான் மன்னன்
வாய்ப்பேது திராவிடர் வாழ! 37

காட்சி 10

[கவிஞர் ஒற்றர் வேடத்தைக் களைந்து விட்டுக் கொல்லர் தெருவிலுள்ள கருமாரைக் கூட்டிக் கொண்டு வந்து கோயில் கதவை உடைக்கிறார்.]

(அறுசீர்)

உழைத் துழைத்தே உருமாறி
உங்களைப் போன் றவர்கள்
களைத் தலுத்துச் சேரியிலே
கவன் று கிடப் போரை
அழைத் திழுத்து வந்தானோர்
கதர்க் குல்லாய் பார்ப்பான்
ஆலயத்துள் நுழைத்திழிவைப் போக்கி
ஆக்குவேன் நுங்களுக்குச் சமத்துவ மென் று. 38

பத்துகிற பக்கமெலாம் போவார்
பாமரர் பகுத்தறியா ரந்த
எத்துகிற அந்தணன் எண்ணம்
எப்படி அறிவார்? அந்தோ!
தொத்துகிற பதவி வேட்டைக்குத்
துணைக் கருவியாக எண்ணிச்
சுத்துகிற தெருவெலாம் சூளுரைத்து
சும்மா போய்நின்று னங்கே! 39

எரிகின்ற நெருப்பைப் போல
எழுந்து வந்தான் பூசாரி
தெரிகின்ற தவன் நடிப்பும்
தீக்குண்டந் தானும் அங்கே

சரிகின்ற மக்களைத் தடுத்துச்
சாற்றுவான் சம்மதமோ தீமிதிக்க ?
புரிகின்ற கோயில் நுழைவு
பிறகுதான் இன்றேல் திரும்பிப்போ ! 40

என்றவன் கூறும் போது
எதிர்த் தொருவரும் பேசாது
நின்ற அங்கிலேயைக் கண்டு
நிதானமாய் ஒருவன் சென்று
நற்றவன் கையைப் பற்றி
நான் நீயும் தீமிதிப்போம்
என்றவன் வாய்மூடும் முன்னே
எங்கு சென்ருனே பூசாரி ! 41

பூசாரி ஓடிப் போனுனினிப்
புரிவோம் ஆலயப் பிரவேசம்
ஆசாரி போலழைத்து வந்தான்
அனுமதிப் பானென நினேந்தார்
வாசாரி அவனென அறிந்ததும்
வாயாப்புக் கொடுத்து விரட்டிவிட்டு
வேசாறிக் கொண்டிருந்தார்
வெகு மக்கள் கோயிலுக்குள்ளே. 42

ஊரார்முன் ஓலமிட் டந்தணர்
ஒருபலனும் பெற்ருர் இல்லே
வேருரின் உதவியும் இன்றியே
வெங்கனலேக் கோயிலுக்குள் போட்டும்
தீரார்பின் மிளகாய்த் தூளேத்
திறமாகத் தூவித் தாளிட்டார்
யாராரின் உயிரேகிற் றென்று
யாரறிவார் காப்பாற்ற வாரீரென்ருர். 43

கண்ணெலாம் செம்பொறிக் கருமார்
கரமெலாம் கூடங்கள் உளிகள்
விண்ணெலாம் தூள் பறக்கவே
விரைந்தார் கோயில் வாயல்
முன்னெலாம் மக்கள் மொய்த்து
முழுக் கதவும் உடைத்துள்ளே
அண்ணலாம் கருப்புச் சட்டை
அணித்தலைவ னங்கு கண்டார் 44

இரண்டு தோளிலும் இருவர்
இருந்தார் மூர்ச்சை யடைந்து
அரண்டு மக்கள் மூச்சடைக்க
அணித்தலைவ னருகில் நின்றார்
புரண்டு கிடந்தன ராம்பலர்
பிணங்களா யங் கவற்றை
இரண் டிரண்டு பேர்கள்கூடி
எடுத்து வந்தார் வெளியே, 45

காட்சி 11

[கோயிலுக்குள் மூச்சுத் திணறி இறந்து போன பிணங்களை ஊர்வலமாக எடுத்துச் செல்கின்றனர்.]

செல்லுங்கள் பிணங்களே ஊர்வலமாய்ச
செந்தமிழ் நாடறிய—நீங்கள்
அல்லும் பகலுமாய் உழைத்த தற்கிங்கே
அடைந்த கேடுந் தெரிய. 46

மன்னர்களா யொரு காலத்திலே இந்த
மாநாட்டை ஆண்டவர்கள்—மனுவின்
அன்யாயச் சாதித்திமிர் சூழுங் கோயிலில்
ஐயையோ மாண்டவர்கள். 47

மத்திய ஆசியா தேசத்திலே ஆடும்
மாடும் மேய்த்திருந்தார்—ஆரியர்
சுத்திய நாடோடிப் பிழைப்போடும்
சிந்து நதித்தீரம் வந்தார். 48

விந்திய மலையுந் தாண்டித் திராவிடம்
விரும்பி இங்கே நுழைந்தார்—வேந்தர்
சிந்தியாம லவரைக் குருக்க ளென்று
சிரம் பணிந்தே புகழ்ந்தார் 49

அக்குருக்கள் கும்பல் உழைக்காது வாழக்
குறுக்கு வழி கொண்டார்—மன்னர்
சிக்குறுங் கற்பனைக் கதைகளை வேதச்
செய்யுளாகக் கண்டார். 50

ஆரியர் மனுநீதிச் சாத்திரத்தை மன்னர்
அங்கீ கரித்தார்—அந்தப்
பூரியர் தீவினை ஓயாததால் கோயில்
புகுந்த மக்கள் மரித்தார். 51

சேவலோ டெழுந்திடுவீர் வயல்க ளுழுது
செங்கதி ரோடு வருவீர்—மதலை
ஆவலோ டெழுந்து அப்பா வென்றழைத்தால்
அழுகவே உதை தருவீர். 52

கால மெலாம் உழைப்பீர் கால்வயிற்றுக்
கூழுக்கே நின்றழுவீர்—இஞ்
ஞாலத் தொழிலாளர் போராட்டம் பற்றிய
ஞாபகம் இன்றித் தொழுவீர். 53

வீதிகள் கூட்டியும் கூளங்க ளள்ளியும்
வேண்டும் பணி புரிவீர்—உயர்
சாதிகள் மலங்களாஞ் சாக்கடை யாவையும்
சார்ந்து தூக்கி வருவீர். 54

நன்றி கெட்டவர்கள் இந்த நாட்டுமக்கள்
நாளும் உம்மை வதைத்தார்—பல
பன்றிக் குட்டிகள் சூழுங் குடிசையிலும்
வாழ்வதையே புதைத்தார். 55

காட்சி 12

[கோயில் நுழைந்தோர் சேரியையும் கோயில் கதவுடைத்தோர் சேரியையும் பார்ப்பனர் கொள்ளி வைக்கத் தூண்டனெ நவனேரவுகின்றனர்.]

(அறுசீர்)

பிரேத விசாரணையும் இன்றிப்
பிணங்க ளூர்வலம் வந்தபோது
குரோதமே நிறைந்த பார்ப்பனர்
கூடி ஆலோசித்துச் சட்ட
விரோத மீதாகும் என்று
விபரீத வழக்குப் பேசியன்றோ!
புரோகிதர் சிறைக்குள் போகாப்
புதுமையைச் செய்து விட்டார். 56

அன்றிர வக்கிர காரமதில்
அந்தண ரந்தரங்க மான
மன்றினில் பேசுகின்றா ரின்றிரவு
மனதினில் துணிவு கொண்டு
நின்றிடல் வேண்டும் அந்த
நீசரே கோயிற்கத வுடைத்தாரைக்
கொன்றிடுந் தீக்கொளுத்தலே
கொள்கையாம்! என்றா ரந்தோ! 57

பழுத்திடு கிழட்டுப் பார்ப்பான்
பதறுது எழுந் தப்போது
வழுத்துவான், 'பாவி சண்டாள
வர்க்கர் குடிலெலாந் தீயிட்டுக்

கொளுத்துதல் சரியே! சூத்திரக்
குண்டனே வேண்டும் எதற்கும்
இழுத்து விடும் வழக்கதில்
இடர்ப்படக் கூடாது நாமே. 58

வானர மாவார் திராவிடர்
வாகான ராமருக்கு வால்பிடித்து
ஈனரும் எரிக்க இசையாத
இலங்கையை எரித்து விட்டார்
வீணறம் பேசுவார் விபீஷணர்
விளையும் அனுகூலம் நமக்கே
கூனரவர்! குருடரவர்! குருமார் நாமே
கூறும் சேரிகள் எரிப்பாரே! 59

தூண்டுங் கடமை நம்மதுவே
தூங்காது நிசியில் கொள்ளியிட
வேண்டும் இலஞ்சம் ஈவோம்நாம்
வேகுவதும் வேக்காடிட்டு
மீண்டும் வெஞ்சிறையில் வீழ்வதுவும்
மீளாத அடிமையாத் தாழ்வதுவும்
யாண்டும் திராவிடராதலினுல்
யாரேனுமொருவனுக்கு ஊட்டுவெறி. 60

என்றான் கருத்தை எல்லோரும்
ஏற்றார்! வறுமையினில் வாடி
நின்றான் ஒருவன்றனை அழைத்து
நின்னுடைய கள்ளுக்குக் காசுயிதோ
நன்றாய் குடித்துச் சேரிகள் எரி!
நாளை வந்துபா ரென்றானுடனே
சென்றான் அவனுக்குச் செப்பினர் ஆசி!
செந்தழல் மூளச்சேரி எரியுதந்தோ. 61

காட்சி 13

[எரிகின்ற சேரிகளுக்குள் புகுந்து உதவி புரிகின்றார் கறுஞ் சட்டைப் படையினர்.]

(அறுசீர்)

கொல்லர் சேரிமுழுது மெரிந்தது
குழந்தை குட்டியோடு மாண்டனர்
பள்ளர் பறையர்சேரி கூடஎரியுது
பறந்தோடி நெருப்பணைக்க
வல்ல உயர்சாதியா ரெவருமங்கு
வரவில்லை; உயிர் துடித்தோடி
நல்ல ஒருவரே முன்வந்தார்
நமது கவிஞரா மவரே! 62

அவரைத் தொடர்ந் தவருடைய
அருங் கருப்புச் சட்டைப்படை
சுவரைத் தாண்டிக் கூரைஏறிச்
சுறுக்கென நெருப் பணைக்க
எவரையு மெதிர் பாராது
இயன் றளவெலா முயன்று
பலரைப் பாதுகாத் திடவே
பயமற்றுப் பணிபுரி கின்றார். 63

சுற்றிலுந் தீப்பிடித் தெரியுது
சுணங்கா துள்ளே பாய்ந்து,
தொற்றிலும் பற்றித் துடிக்கும்
துயர்குழவி கயிற்றுக் கட்டிலும்
பற்றித் துவளுங் கிழவியருகே
புகைமுற்றி மூடிய கண்ணர்
எற்றி விழுஞ் சிறுவர்
எல்லோரையு மெடுத்தார் வெளியே. 64

காட்சி 14

[நெருப்புக் கிரையான குடிசைகளும் மக்களும் தவிர தப்பிப் பிழைத்தோரும் தீப்புண்ணால் தவிப்போரும் சூழ்ந்த பொட்டலில் கவிஞருக்கு ஒரு காதலி தோன்றுகிறள்.]

(எண்சீர்)

சேரிஎரி செந்தழலுங் காலைஎழுங் கதிரோன்
செங்கதிரும் சேர்ந்த போதுலகும் எரிகிறதோ
பாரீர்! என்றய்யமிகப் படுமாறுபரிதி பரித்தெழுந்து
பாட்டாளி யுலகை எட்டிப் பார்த்தான்
நேரில் நிற்கவொண்ணுது நெஞ்சு பொறுக்காது
நெருப்பினில் வெந்துருகிய தாய்மார்களும் சேயர்களும்
பாரில் பகலிரவு பாராதுழைத்தோர் எலும்பும்
பசையிலாத் தசைகளுமே கிடந்தனவாம் பொசுங்கி. 65

கருப்புச் சட்டைப்படைத் தொண்டர்கள் எடுத்துவந்து
காப்பாற்றிக் கொண்டுவந்த மக்கள் சிலர்தாமும்
வெறுப்புக் கொண்டுயிர் விடுவதே நலமாமென்ன
வெம்புகின்றார் வெறும் அன்பாலாவ தென்ன ஐயோ !
விரிப்பில்லை வெயில் மறைக்கக் கூறையுமில்லை
வெந்த புண்ணாற்றும் மருந்துமில்லை விரும்பியதேன்
நெருப்புடன் போராடட; ஆயுளை நீளச்செய்தும்
நெடுந்துயர் மூழ்கிடவோ வுதவினீர்? என்றார் 66

அல்லலுறுவது தவிர்க்க அழலின் புண்ணாற்ற
ஆதரிக்கவே அரியபயிற்சி ஏற்றெங்கும்
வெல்லல் ஒன்றே குறிக்கோளாய்ப் போராடிமீளும்
வெஞ்சமரில் படுகாயமுற்று வீழும் வீரர்களின்

துள்ளல் துடித்தலுமுள்ள அங்கங்க ளெல்லாம்
துரிதமாய் ரத்தமது வடிக்காது தூக்கிச்
செல்லல் எனும் பணிசெய்து திரும்பியோரைச்
செயலாற்றும் களமீதுவென் றேவினர் கவிஞர் 67

பறைச்சிமகள் பகுத்தறிவு உடையாள் வெகுதொலைவிற்
பரிவுநிறை யவளப்பன் இராணுவத்தி லிறந்தான்
குறைச்சலில்லை அரசியலார்தரும் மானியத்தால்
குழந்தைமுத லவளைப்பள் ளிக்குவைத்த ஆத்தாள்
இரைச்சல் மிகுந்தெரிந்த கொள்ளிக் கிரையானளந்தோ!
இதையம் நைந்தாள்; என்அன்னையே நீளரிந்தாயே!
துரைச்சி போலினிப் பள்ளிக்கும் போவேனோநான்
துயரக்கடலில் மூழ்கினேன் அனாதையுமானேன்!
என்றாள் 68

அல்லவே! என்றகுரல் கேட்டவளுந் திரும்ப
அன்பே! என்றார்கவிஞர்; என்ன இது கனவோ!
அல்லவே! இன்பத் திராவிடர் இதயஒலியே!
ஆகுமிவர் இளங்கவியே! இனஎழுச்சிப் புலவர் எனும்!
சொல்லவே என்மகிழ்ச்சி சூழும் ஆயிரம் நாக்கள்
சேர்ந்துதவி செய்தாலும் செப்பிமுடிவாமோ இச்செகம்
கொள்ளவே கொள்ளாது காதல் வெள்ளமல்லவோ!
கொள்ளை கொண்டாரென் உள்ளமொல்லா மவரே
என்றாள் 69

இருவரும் சற்றே மனத்துளினியகனக் கண்டார்!
இரணகளத் தெங்கேனு மிதுநடப்ப துண்டோ?
ஒருவருந்தான் அறியாததோ! உண்மைக் காதல்
உருகி இரண்டறும் உள்ளத்தே உதயமு மாமென்று!

கருவுறும் அன்புக்குள்ளே காதலோர் குழவியாகிக்
கனிவுறும் நேரத்திலிடம் பொருள் ஏவலேது?
மருவுறுந் தருணமதிற் சூழும் நிலையுணர்ந்து
மனம் நாணிப் புன்னகையிற் றவழ்ந்தினிது போந்தார் 70

புதுப்பருவக் காதலர்கள் புரிகின்றார் தொண்டு
புண்பட்ட மக்களும் பூரிக்கின்றார் அங்கே
வெதுப்புறுக்கும் வெயிலும் அவர்களை வருத்திடாது
வேதனையும் மிகுந்திடா தாவனவே செய்தார்
சதுப்புறுந் தரையகற்றி இருக்கை பலஅமைத்து
சகலர்க்கும் வயிறார உணவாக்கிப் போட்டுக்
குதப்பநறும் பாக்குவெற்றிலை ஈந்து மகிழ்ந்தே
கூறுகின்றார் எங்கள் திருமண விருந்திதுவேஎன்று. 71

காட்சி 15

[எதிர்பார்த்திருந்த அரசாங்க உதவி எதுவும் கிடைக்காததால் கவியும் கவிக்கினியாளும் பாட்டாளி மக்களின் புரட்சிக்குத் தலைமை வகிக்கின்றனர்.]

(அறுசீர்)

அரசியலாரிட மிருந்தும்
அவசியமான உதவி இல்லை
சிரசின் நேரே மீண்டும்
சூரியன் வந்து விட்டான்
அரசிலை நிழலும் போதவில்லை
அழல் புண்ணோ ரெல்லாரும்
முரசொலி செய்கின்றா ரினி
முடியாது சகிப்ப தென்று 72

மாலைச் செய்தித் தாளில்
மந்திரி அறிக்கை வந்தது
நூலைத் தெரியார் கோயில்
நுழைவது தலைவிதி யாகாது
மேலைத் தவஞான வேதியர்
மன வேதனையால் சபித்த
ஏழைச் சூத்திரர் சேரிகள்
எரிந் திருக்கலா மென்றார். 73

தலைவிதியா? சாபமா? சதியா
தகுந்த பதில் தருவீரோ?
விலைமதிக் கொண்ணாப் பாட்டாளி
வியர்வையும் ரத்தமும் ஒன்றே

நிலைமதித் தாளாதா ராட்சியில்
நிம்மதி நிலவா தென்பதுண்மை
விளைவதை அறியட்டும் புரட்சி
விளக்கதை ஏற்றுவோ மென்றார்கள் 74

கவிஞர் புகல்வார் அங்கு
கவிக் கினியாளைக் காட்டி
அவிஞ்சை அல்லள்! கலாவதி
அருங்கலைக் கல்வி அறிவாளி
கவிஞயப் பாடகி என்றாலும்
கோயில் கதவை திறக்காரெ!
புவிஞயப் புரட்டுகள் ஒழியப்
பாட்டாளி உலகே திரண்டெழுக! 75

கேடுகெட்ட ஆரியத்தால் நாம்
கேவலப் படுத்தப் பட்டோம்!
நாடுமுற்றும் அடிமை! நமது
நாவடிமை! நடக்குங் காலடிமை!
ஏடுதொட்டாலே பாவம்! காதில்
கேட்டால் காச்சீசயம் பாச்ச
நீடுரைகள் மனுநீதி தர்மச்
சாத்திரந் தோறும் உண்டே! 76

ஆங்கிலப் பாதிரி ஆலயநிதியும்
ஆகுதே திராவிடர் கல்விக்கும்
தீங்குள நோய்கள் அகற்றவும்
திருமகவு பிரசவஞ் செய்யவும்
பாங்குள வைத்திய சாலைகளெனப்
பலவித உதவிகள் புரியும்போது

ஈங்குள மக்கள் குருதியுறிஞ்சும்
கோயிலில் செல்வக் குவியலுமேனோ? 77

வாங்கியே தீருவோம்! நம்
வழக்கங்கே கூறுவோம்! வீணே
தூங்கியே கிடக்கும் செல்லவம்!
துஞ்சியே வதையும் மக்கள்!
ஏங்கியே நிற்பானே னிவ்விரண்டும்
இணைத்தின்பத் திராவிடங் காணென
ஓங்கியே கோயில் வாயலில்
ஒலித்து மறியல் புரிவோமே! 78

தீதிலா அகிம்சைப் போரிதுவாம்
தீரமுடன் ஆற்றிச் சிறையில்
வாதிலா வழக்காய் வதைவோம்
வையம் நகை இழிவாழ்வினும்
ஏதிலார் சிறைச்சாலை இழிவலவே!
இடரலவே! இம்சையு மல்லவே!
தோதிலார் நாமொரு தொகுதியிலார்
தொடர்ந்த துக்கமுள்ளா ரானேமே! 79

துக்கந் தாங்குங் குறியெனவே
துலங்குங் கருப்புச் சட்டைசீலை
இக்கணம் ஆண்பெண் ணணிந்து
இனஎழுச்சிப் போராட வாரீர்!
தக்க நல்மகளீர் தொண்டர்
தலைவியாம் கலாவதி; இனிமேல்
மிக்க மேலான கட்டுப்பாடால்
மிகவலிய புரட்சி யாகுமென்றார்! 80

காட்சி 16

[துடிக்கக் கஞ்சியும் துடியிறுக்கத் துச்சு மில்லா ஏழை மக்கள் கோயில் வாயலில் மறியல் செய்து கவிஞருடன் சிறைக்குச் செல்கின்றனர்.]

(கிளிக்கண்ணிகள்)

கோயிலின் வாய லெல்லாம்
குடுகுடென்று பள்ளுப்பறை
சாய்வது காண்பீரங்கே—கிலியோ!
சாற்றது போன தெங்கே? 81

குடித்திடக் கூழும் இல்லை
குடியிருக்கக் குச்சும் இல்லை
முடிக்க முடிக்க வேலை—கிலியோ!
முடியா தென்றே சொல்ல? 82

குழவிக் கல்லுக் கேனு!
கோபுரக் கோயில் வீடும்
உலவி வருந் தேரும்!—கிலியோ!
உதவா தென்றே சொல்ல? 83

குவிந்திருக்கும் செல்வம் அங்கே
குடல்வாடும் மக்கள் இங்கே
அவிந்திருக்கோ கண்கள்!—கிலியோ!
அதைப் பற்றி பேசுதற்கு? 84

வருடா வருடம் வேறே
வருங் கோடி ரூபாய்கள்
குருடா திராவிடா உனக்கு !—கிலியோ !
கெடுத்திட ஏன்விடுவாயோ ? 85

ஆடை ஆபரணம் நிதி
அள்ளியள்ளி ஏன் கொடுத்தீர் !
ஆண்டவன் வேண்டினனே !—கிலியோ !
அடுக்காதே என்று சொல்ல ? 86

கல்விக்குச் செல்வம் ஈயார்
களியாட்டம் ஆடி உய்வார்
செல்விக்குத் திருடி இடுவார்—கிலியோ !
செயல்தடுக்க முடியாதோ ? 87

தொழிலுக்குச் செல்வம் இல்லை
தொழிலாளர்க்கு வேலை இல்லை
அழிவுக்குக் கோயில் பணம்—கிலியோ !
ஆக்காதே என்று சொல்ல ? 88

ஏழைக்கும் உதவி இல்லை
ஏழ்மையும் ஒழிய வில்லை
விழலாம் திருவிழாக்கள்—கிலியோ !
வேண்டா மெனத் தடுக்க ? 89

இந்த விதமாம் தொண்டர்கள்
எடுத் தெடுத்துச் சொன்னார்கள்
வந்தார் போலீஸ் காரர்—கிலியோ ?
வரட்டு மென்றே நின்றார்கள். 90

பிடித் திழுத்துச் சென்றார்கள்
பெருஞ் சிறைக்குள் அடைத்தார்கள்
வடித்த இரத்தம் கொஞ்சமல்ல—கிளியே!
வரவில்லை ஒரு வருக்கும்! 91

தடியடிப் பிரயோக மென்றார்
தலைக ளெல்லாம் உடையுமென்றார்
பொடிபடப் புடைத்தும் விட்டார்—கிளியே!
போனதே போனது தான்! 92

செந்தமிழ் கவியும் அப்போச்
சிறைக்குள் அடைக்கப் பட்டார்
வந்தாள் தலைவி கலாவதி—கிளியே!
வரமுடியா தவளிடமும். 93

காட்சி 17

[கலாவதி சட்டசபை வாயலில் கிளர்ச்சி செய்து திராவிடர் உள்ளத்தில் இன எழுச்சியை எழுப்புகின்றாள்.]

செந்தமிழ் நாடென்ப திதுதானோ ?—இன்பத்
தேன்வந்து பாய்வது நிசந்தானோ ?—எங்கள்
தந்தையர் நாடென்ப திதுதானோ ?—வீணே
தாழ்த்தப் பட்டோமே ! இது ஏனோ ? 94

வள்ளுவர் தந்த திருக்குறளே—தமிழர்
வாழ்க்கை வழக்கத்தில் இல்லையே !—அன்று
எல்லா உயிர்க்கும் பிறப்பொக்கும்—என்றார்
எங்கு சென்றதவர் வாக்கும் ? 95

இரந்து வாழ்வது வேண்டினனோ ?—கடவுள்
பரந்து கெடுவெனப் பாடினனே !—அந்தச்
சிறந்த குறளை உள்ளுவரோ !—இன்று
செந்தமிழ் நாட்டில் உள்ளவரே ? 96

ஒன்றே குலமென் றிருந்தாரா ?—முன்னோர்
உயர்வு தாழ்வென் றிருந்தாரா ?—சிலர்
நன்றே வாழ்ந்து இருந்தாரா ?—பலர்
நலிந்தே வீழ்ந்து இருந்தாரா ? 97

பேதம் நிறைந்தது எப்போது ?—இங்கு
பேதமை சூழ்ந்தது எப்போது ?—சம
நீதம் இழந்த திங்காராலே ?—மனு
நீதி முளைத்த திங்காராலே ? 98

கல்வி குறைந்தது எப்போது?—தமிழ்
கலைகள் மறைந்தது எப்போது?—நாட்டில்
பல்வித கேடுகள் சூழ்வதற்காக—இப்
பாதகச் சாதிமுறை யார்வகுத்தார்? 99

நூற்றுக்கு மூன்றே பேராவர்—ஆரியர்
நுழையத் திராவிடர் சோர்வர்—பதவி
நூற்றுக்கு நூறவர் வகிப்பரோ?—திராவிடர்
நூறும் பிளவுகள் சகிப்பரோ? 100

இத்தகை கோரம் தாண்டவமாடு—மிந்
நாடாம் திராவிட நாடு—இதை
மொத்தமே ஆளும் அமைச்சர்—ஒரு
சுத்தத் திராவிடர் ஆச்சோ? 101

திராவிடர் திராவிடம் ஆளும்—ஒரு
திருநாளும் வந்தே சூழும்—இன்றேல்
அருவிடர் கொட்டம் அடங்கும்—ஆரியத்
திராவிடப் போர் தொடங்கும். 102

சட்ட சபைகள் கிடுகலங்க—தலைவி
சாற்றினள் மக்களும் விளங்க—பெருங்
கூட்டமாம் திராவிடப் பெண்கள்—அவள்
கூடவே பாடினர் பண்கள்! 103

பெண்களின் வீரக் கிளர்ச்சியைக்—கண்டு
ஆண்களும் அகற்றினர் தளர்ச்சியை—இனிக்
கண்கள் இருந்தும் குருடரோ?—ஒரு
கணமும் அயர்ந்தால் புருடரோ? 104

தன்மானங் காத்திடுந் தகமை—எங்கள்
தாய்மார்கள் ஊட்டிய மகிமை—உங்கள்
நன்மனத் தலைவர்கள் நாளையே—வர
நடக்கும் விடுதலை வேலையே! 105

இங்ஙனம் எழுச்சி முழங்கவே—சட்டம்
இயற்றும் மக்களும் விளங்கவே—நாடு
எங்ஙனும் திராவிடர் ஆட்சியாம்—இனி
ஏற்படுவது உண்மை யாச்சுதாம். 106

காட்சி 18

[திராவிடநக்தும் ஆரியநக்தும் சட்ட சபையில் பலமான வாக்த வாதங்கள் நடைபெறுகின்றன. இறுதியாகத் திராவிடரே வெற்றியடைந்து திராவிடர் ஆட்சியை அமைக்கின்றனர்.]

திராவிட உறுப்பினர்:

(தண்டகம்—ஆதிதாளம்)

கொல்லர் பள்ளர் பறையர் சேரிகள்
எரிந்ததா—உமக்குத்—தெரிந்ததா?
கொள்ளி வைத்தவன் யாரென்று கண்டு
கொண்டாரோ—உமக்கும்—விண்டாரோ? 107

ஆரிய அமைச்சர்:

வேதியர் சாபத்தால் சேரிகள் வெந்ததை
விள்ளவோ—அது—அல்லவோ!
சாதியாசாரச் சாத்திரங் காத்திடும்
சக்தியாம்—தெய்வ—பக்தியாம்! 108

திராவிட உறுப்பினர்:

தீண்டாமை ஒழிப்பும் கோயில் நுழைப்பும்
தீட்டினோம்—திட்டம்—காட்டினோம்!
தூண்டாமையால் மக்கள் தூங்கிய காலமும்
தொலைந்ததே—அறிவு—விளைந்ததே. 109

ஆரிய அமைச்சர்:

காந்தியார் சொல்லில் கடுகளவு மதிப்பேனும்
கண்டீரோ!—செயலில்—கொண்டீரோ!
சிந்தியாரார்? சென்னை மில்களை ஒழிக்கச்
செய்தீரோ—அவரை—வைதீரோ? 110

திராவிட உறுப்பினர்:

மகாத்மா காந்தியடிகள் மறுத்தும் உதித்த
மந்திரியாரே—ராஜ—தந்திரியாரே!
சுகாத்மா வடநாட்டா ரங்கு கட்டுவதேன்
யந்திரக்கோட்டை-இங்கேன்-தந்திரச்சேட்டை? 111

ஆரிய அமைச்சர்:

வடநாட்டிற்குத் தென்னுடு வாணிகத்தி லடிமையென
வழுத்துவோம்—மில்கள்—கொளுத்துவோம்!
வர்க்கத்தில் ஆரியர்க்குத் திராவிட ரடிமையென
விளங்காதோ—உமக்குத்—துலங்காதோ! 112

திராவிட உறுப்பினர்;

அடிமைக் கடிமையாய்த் திராவிடர் நுங்காலில்
விழுவாரோ—இனித்—தொழுவாரோ?
மிடிமைக் குணமுடைய ஆரியர் சூழ்ச்சிகள்
மடியுமே— தலைமை—முடியுமே! 113

ஆரியஅமைச்சர்:

சிச்சி! சு.ம. பேச்சிங்கு பேசுவா யானல்
சிரழிவீரே—காங்கிரஸ்—பேரொழிவீரே!
ஆச்சிதுவும் மேலிடத்து வழக்கங்கே போகும்
அறிந்தீரோ—விவரம்—புரிந்தீரோ? 114

திராவிட உறுப்பினர்:

மேலிடத்தும் முழந்தாளிடோம் உம்மிடத்தும்
நம்பிக்கையலவே- அவ நம்பிக்கையுளவே
வேலிடத்தும் மார்கொடுக்கும் வீரத் திராவிடர்
வாழுவோம்—நாட்டை—ஆளுவோம்! 115

காட்சி 19

[விடுதலை அடைந்த திராவிட நாட்டில் மக்கள் விடுதலை விழாக் கொண்டாடும்போது, கனவில் கண்ட கவி ஐக்கிய திராவிடத்தின் திட்டம் தீட்டுகிறார்; கனவு காணும் கவியும் விழித்து எழுகின்றார்.]

(வராளி- ஆதிதாளம்)

ஆடுவோமே—கவியைப்—பாடுவோமே
ஆரியர் சூழ்ச்சியை அழித்து விட்டோமென்று (ஆ)

பாட்டாளியைச் சூத்திரனென்ற
காலமும் போச்சே—ஆரியப்
பார்ப்பான் திராவிடமாண்ட
காலமும் போச்சே—தகுதி
பார்ப்பானுக்கே என்றிருந்த
காலமும் போச்சே—பிறப்பால்
பார்ப்பான் உயர்வென்ற
காலமும் போச்சே (ஆ)116

திராவிடர் திராவிடம்
என்பதே பேச்சு—தமிழ்
தெலுங்கு கன்னடம்
மலையாளமும் ஆச்சு—இதில்
துளுவமும் சேர்ந்ததும்
துலங்கவும் ஆச்சுதே—வெகு
துரிதமாய் ஐக்கியத்
திராவிடம் ஆச்சுதே (ஆ)117

சிறைக்கதவு திறந்திடுங்
காலமும் ஆச்சே—ஏழை
சிறைக்குள் புகமுடியாக்
காலமும் ஆச்சே—ஏழ்மை
சிறைப்பட வேண்டிய
காலமும் ஆச்சே—நாடு
செழிப்புற வேண்டிய
காலமும் ஆச்சே. (ஆ)118

எல்லோரும் கல்விகற்கும்
காலம் வந்ததே—திராவிடர்
எண்ணிலாக் கலைஞராகும்
காலம் வந்ததே—திராவிடம்
எங்குமே ஆலைகள்சுழல்
காலம்வந்ததே—நாமும்
இரதமேறி விண்ணுலாவும்
காலம் வந்ததே (ஆ)119

பெண்கள் ஆண்கள்சம
மென்ப தறிந்தோம்— இனிப்
பேதமையே இருக்கா
தென்ப தறிந்தோம்—கற்பு
ஆண்களும் பெண்களும்
அடைவதென் றறிந்தோம்—கணவன்
இழந்தவள் மறுமணம்
புரிவதென் றறிந்தோம் (ஆ)120

அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும்
ஆர்வமே அளிப்போம்—புராணம்

ஆபாசக் களஞ்சியம்
ஆகையால் ஒழிப்போம்—பிளவு
ஆயிரம் உண்டாக்கிய
ஏடுகள் எரிப்போம்—நமது
ஆருயிர்த் தொழிற்கலை
யாவும் வளர்ப்போம். (ஆ)121

(எண்சீர்)

எங்காடுகின்றூ ரிவ்வாட்டம் என்றையந் தோன்ற
எழுந்துவிட்டே னென்னஏமாற்றம் என்னென்பேன் அந்தோ!
பொங்குகடல் சூழ்நமது திராவிட நாடெங்கும்
பொறுமையோ டெப்போதும் போலிருக்கக் கண்டேன்!
இங்கேன் வந்தேனோ! இன்பக்கனு உலகமெங்கே?
இனியான் மீண்டும் அதனைக் காண்பேனோ? இன்றேல்
எங்கன மேனுமிந்தத் திராவிடத்தில் திடீரென்றே
எழப்போகும் இனஎழுச்சிப் போரதுவே காண்பேனோ!

நாடகாபிமானிகளுக்கு ஓர் நற்செய்தி !

பூர்வீகத் திராவிடர்களின் புனிதமான வாழ்க்கை வரலாற்றுள் ஓர் திடுக்கிடும் கோரச் சம்பவம் !

●

ஆரியர்கள் வருகைக்குப் பிறகு ஓர் இரவில் நடந்த உண்மை !!

●

வீரம், காதல், தியாகம் திராவிடர்களின் மூதாதைகளிடம் எவ்விதம் விளங்கிற்று என்பதற்குச் சங்க இலக்கியச் சான்றுகளோடு நாடக வடிவத்தில் உருவாகிக் கொண்டிருக்கும்,

●

'திராவிட பூபதி'

என்ற நூலில் கூடியசீக்கிரம் காண்பீர்களாக !

: வெளியிடுவோர் :

திராவிட கலா நிலையம்

55, முக்தாருன்னிஸா பேகம் தெரு,

மவுண்ட்ரோடு, : : சென்னை.

நவயுக நாடக சபா

பொது அறிக்கை.

- வாலிபத் தமிழன்பர்களின் நற்பொழுது போக்கிற்காகவும், சமூக சீர்திருத்த நாடகங்கள் இயற்றி நடிப்பதற்காகவும், மேற்கண்ட 'நவயுக நாடக சபா' (திருவல்லிக்கேணி) சென்னையில் அமைக்கப் பட்டிருக்கிறது.

- நவயுக நாடக சபாவின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படும் வாலிபத் தமிழன்பர்களெல்லோரும் மாதம் ஒன்றுக்கு சந்தா ரூபாய் ஒன்று வீதம் செலுத்தி அங்கத்தினர்களாகலாம், விருப்பமுள்ள அங்கத்தினருக்கு நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பளிக்கப்படும்.

- நவயுக நாடக சபாவில் பங்காளிகளாக விரும்பினால், பங்கு ஒன்றுக்கு ரூபாய் பத்து வீதம் செலுத்த வேண்டும்.

- தற்சமயம் 'விதியின் சூழலா'? என்ற உன்னதமான சமூக சீர்திருத்த நாடகம் ஒத்திகை நடந்து கொண்டிருக்கிறது, மற்றவிபரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதியோ! அல்லது நேரில்வந்தோ! தெரிந்து கொள்ளலாம்,

இங்ஙனம்: C. N. ஜெயவேல், கௌரவகாரியதரிசி

நவயுக நாடக சபா

நெ. 73, பெல்ஸ் ரோடு, :: சென்னை-5.

SENGUNTHA MITHRAN PRESS, MADRAS—M.S. 277-C.4000

WATCH HO

DOCTOR FOR CLOCKS,

TIMEPIE CHES

(Specialist Watches)

IN MODERATE CHARGES

Apply to :

MODERN WATCH & CO.,

1/24 PYCROFTS ROAD

MADRAS-5.

For all kinds of Sewing Machines

Repairers and Spare

Part Dealers

Apply to :

KRISHNA & CO.,

20-A, ELLIS ROAD,

MADRAS-2.

வெ… வெளிவரும்!

மறைத்து … று மனப்பால்
குடிப்பே… திடுக்கிடக்
கூடிய… மகள் !

உதயம்! உதயம்!! உதயம்!!!

'ஐக்கிய திராவிடம்'

ஆம்! பிரிவினையின் பிள்ளையே ஐக்கியம்!
ஐக்கியத்தின் தாயே பிரிவினை!!
பிரசவ வேதனையே புரட்சியாம்!!!

வெளியிடுவோர்

திராவிட கலா நிலையம்,

55, முக்தா ருன்னிஸா பேகம் தெரு
மவுண்ட்ரோட், சென்னை.